# <u>நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகை</u>

(*2019* ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் மார்ச் *31* ஆம் திகதி வரை)

இந்த அறிக்கையானது *2019* ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் மார்ச் *31* ஆம் திகதி வரை நிதி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளை சுருக்கமான முறையில் விபரிக்கின்றது.

**1. மகாணங்களின் அடுத்துவரும் ஆண்டுக்குரிய மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத் தேவைகள் தொடர்பான பாதீட்டு வழிகாட்டிகளை வழங்குதல்**

நிதி ஆணைகுழுவனது மாகாண நிர்வாகதிற்கு அவர்களின் மூலதன மற்றும் மீண்டெழும் பதீட்டு தேவைகளை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல்களை ஒவ்வொரு வருடமும் வழங்குகிறது. 2020 ஆம் ஆண்டுக்கான விரிவான தேவை மதிப்பீடு வழிகாட்டல்கள் அவசியமான இணைப்புக்களுடன் தயாரிக்கப்பட்டு அனைத்து மகாணசபை பிரதம செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இவ்விரிவான வழிகட்டல்கள் மாகாண தேவைமதிப்பீடுகளை செயத்திறன்மிக்கதாக மேற்கொண்டு நிதி ஆணைக்குழுவுக்கு சமர்பிக்கப்படகூடிய மாதிரி படிவங்களை உள்ளடக்கியிருந்தது.

அணைத்துத மாகாணங்களிடமிருந்தும் 2020 நிதியாண்டுக்கான மகாணங்களின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவீன மதிப்பீட்டு தேவைகளின் பூரணப்படுதப்பட்ட படிவங்கள் நிதி ஆணைக்குழுவுக்கு முறையே 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 மற்றும் மே 31 ஆம் திகதிகளில் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது

**2. 2019 ஆம் ஆண்டுக்கான மாகாண அபிவிருத்தி திட்டங்களை பரிசீலனை செய்தல்**

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சில மாகாண சபைகளிடமிருந்து வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டங்கள் நிதி ஆணைக்குழுவிற்கு கிடைக்கபெற்றது. இத் திட்டங்கள் மிக கவனமாக நிதி ஆணைக்குழுவால் ஆய்வு செய்யப்பட்டது. நிதி ஆணைகுழுவின் தலைவர், அங்கத்தவர்கள், செயலாளர், மற்றும் தொடர்புடைய ஏனைய உத்தியோகத்தர்களுடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்கள உத்தியோகத்தர்கள் அடங்கலான குழுவொன்று, மாகாண அபிவிருத்தி திட்டங்களின் மாதிரி மற்றும் நடைமுறை திட்டங்களை மீளாய்வு செய்வதற்கு 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி தென் மாகாண சபைக்கும், மார்ச் மாதம் 27 ஆம் திகதி ஊவா மாகாண சபைக்கும் விஜயம் மேற்கொண்டனர்.

பிரதம செயலாளர்கள், அனைத்து மாகாண அமைச்சு செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் இந்த மீளாய்வு கூட்டத்தில் பங்குபற்றினர். 2019 ஆம் ஆண்டுக்கான இவ்விரு மாகாண சபைகளினதும் வருடாந்த அபிவிருத்தி திட்டங்களானது ஆய்வு செய்யப்பாட்டு மீளாய்வு கூடத்தின் கலந்துரையாடல்களின் பிரகரம் சில திருத்தங்களை மேற்கொண்டு அவற்றினை அமுல்படுதுவதற்கு நிதி ஆணைக்குழு தனது இணக்கப்பாட்டினை வழங்கியது.

ஏனைய மாகாண சபைகளின் மீளாய்வு கூட்டமானது, அந்த மாகாண சபைகளின் வருடாந்த திட்டங்கள் கிடைத்தவுடன் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படவுள்ளன

**3. 2019 ஆம் ஆண்டிற்கான பரிந்துரைகள்**

2019 ஆம் ஆண்டிற்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவீனங்களுக்கான நிதிப்பகிர்வு சம்பந்தமான பரிந்துரைகள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதி பாராளுமன்றதிற்கு சமர்பிக்கப்பட்டது. (அரசியலமைபின் 13 வது திருத்தத்தில் உறுப்புரை 154(j) விற்கு அமைவாக)

**4. நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை – 2017**

**2017** ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை மும் மொழிகளில் தயாரிக்கப்பட்டு மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு 2019 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவின் தலைவர் திரு யு.எச்.பலிஹக்கார அவர்களினால் சமர்பிக்கப்பட்டுள்ளது.

இன் நிகழ்வில் நிதி ஆணைக்குழுவின் அங்கதவர்கலான கலாநிதி.இந்த்ரஜித் குமாரசுவாமி,கலாநிதி.ஆர்.எச்.எஸ்.சமரதுங்க,பேராசிரியர்.எச்.எம்.ஸபருல்லாஹ்,திரு.வி.கனகசபாபதி மற்றும் நிதி ஆணைக்குழுவின் செயலாளர் திரு.எ.ரிஎம்.யு.டி.பி.தென்னகோன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இவ் அறிக்கையானது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது




**5. மாகாண கணக்காய்வு அறிக்கைகள் சம்பந்தமாக நிதி ஆணைக்குழுவின் அவதானிப்புகளை தயாரித்தல்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது தினண்க்களதின் தென், சபரகமுவ, ஊவ மகாணங்களின் கணக்காய்வு அறிக்கைகள் நிதி ஆணைக்குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு நிதி ஆணைக்குழுவின் அவதானிப்புகள் ஆணைகுழுவால் கவனதிட் கொள்ள்ப்பட்டதுடன் உரித்தான மகாணங்களின் பிரதம செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. நிதி ஆணைக்குழுவின் அவதானிப்புகலானது, மாகாண மட்டத்தில் கணக்காய்வு விசாரணைகள் குறைவடையவும் மாகாண நல்லாட்சியை அதிகரிக்கவும் பயனுள்ளதாக இருக்கும்.

**6. ஆணைக்குழுவிற்கான புதிய கட்டிடம்**

இல 03, சரண மாவத்தை ராஜகிரியில் உள்ள நிதி ஆணைக் குழுவின் புதிய கட்டிடமானது மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் கரு ஜயசூரிய , கௌரவ டாக்டர்.ஹர்ஷா டி சில்வா, கௌரவ மாகாண ஆளுநர்கள் மாகாண சபை முதலமைச்சர்களளின் பிரசன்னத்துடன் வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டது. இந்நிகழ்வில் ஏனைய அழைப்பாளர்களும் மற்றும் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.





**7. நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமனம்**

அரசியலமைப்பின் உறுப்புரை 41B மற்றும் 154 R (1) (C) இன் கீழ் நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக கீழ் வரும் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மேதகு ஜனாதிபதி அவர்களால் மீள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் .

தலைவர் : திரு. உதித்த ஹரிலால் பலிஹக்கார
உறுப்பினர் :,திரு. வி. கனகசபாபதி
உறுப்பினர் :பேராசிரியர். எச்.எம். ஸபருல்லாஹ்

இதற்கு மேலதிகமாக , அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (1) (a) மற்றும் (b) இன் படி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் திறைசேரி செயலாளரும் ஆணைக்குழுவின் பதவிவழி உறுப்பினராக பணியாற்றுவர்.

**8. நிதி ஆணைக்குழுவின் தரவு தளம் மற்றும் தரவு முகாமைத்துவ முறைமை**

மீண்டெழும் செலவீனதிற்கான தரவு தளம் செயல்முறையின் முதல் படி ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டு அதன் முன்மதிரி "தீக்ஷனவால்" உருவாக்கப்பட்டு நிதி ஆணைக்குழுவின் கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகளுக்காக முன்வைக்கப்பட்டது. இதன் இரண்டவது கட்டம் தீக்ஷன மென்பொருள் அபிவிருத்தி நிறுவனத்தால் நிதி ஆணைகுழுவுடன் இணைந்து உருவாக்கப்படுகிறது. மென்பொருள் அபிவிருத்தி நிறுவனத்தினர் இந்த உருவாக்கம் பற்றிய ஒரு விளக்கக்காட்சியை ஏப்ரல் மாத தொடக்கத்தில் முன்வைக்க எதிர்பர்கின்றனர். இத் தரவுத்தளத்தின் இறுதி உருவாக்கதை நிதி ஆணைகுழுவிற்கு ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க எதிர்பார்க்கப்படுகிறது.

**9. உள்ளக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

முதற்காலண்டுக்கான உள்ளக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் மார்ச் 28 ஆம் திகதி இடம்பெற்றது. நிதி ஆணைக்குழுவின் செயலாளர் தலைமையில் உள்ளக கணக்காய்வு குழு கூட்டம் , முகாமைத்துவ கணக்காய்வு திணைகளத்தின் பணிப்பாளரின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது. கலந்துரயடல்களின் முடிவுகள் நிதி ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களுக்கும் தொடர் நடவடிக்கையினை எடுப்பதற்காக அறிவிக்கப்பட்டது. இது தொடர்பில் ஆணைகுழு உள்ளக கணக்காய்வு நடைமுறைகள் ஒழுங்குமுறை அம்சங்களுக்கு மேலதிகமாக செயல்திறன் அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் வழிநடத்துகிறது .

**10. வேலை ஆய்வு**

நிதி ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவின் கட்டாய தொழிட்பாடுகளை வினைத்திறன் செயல்திறன் முன்னேற்றத்துடன் செயல்படுதுவதற்கும் ஆணைக்குழுவின் உற்பத்தி திறனுடன் பயனுள்ள மனித வள பயன்பாடு மற்றும் ஊழியர்களினது அவசிய தேவைகளை நிர்ணயிப்பதற்கும் வேலை ஆய்வு ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

**11. நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகை அறிக்கை**

நிதி ஆணைக்குழுவின் 2018 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான செயலற்றுகை அறிக்கையானது 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதி அரசியலமைப்புச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 12. அலுவலர்களின் திறன் விருத்தி

### 12.1 விருந்தினர் விரிவுரைகள்

பின்வரும் விருந்தினர்கள் நிதி ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கு விரிவுரைகளை மேற்கொண்டனர்

| பெயர் | தலைப்பு | திகதி |
|---|---|---|
| பேராசிரியர் நளின அபேசேகர, சிரேஷ்ட விரிவுரையாளர், திறந்த பல்கலைக்கழகம் | சிறந்த 2019 ஆம் ஆண்டு | 1,ஜனவரி 2019 |
| டாக்டர் பி.விஷாகா ஹிடலகே | இலங்கையில் அனர்த்தங்கள் | 10, ஜனவரி 2019 |

### 12.2 உள்ளூர் பயிற்ச்சி

நிதி ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டதுடன் சில உத்தியோகதர்கள் பின்வரும் பயிற்சிகளில் பங்குபற்றினர்

• அடிப்படை ஆங்கில மொழிகள்
• அடிப்படை தமிழ் மொழிகள்
• அடிப்படை சிங்கள மொழிகள்

## 13. மாகாண விளையாட்டுத்துறை அபிவிருத்தி சம்பந்தமான கூட்டம்

2019 ஜனவரி 17 ஆம் திகதி ஒன்பது மாகாணங்களுக்கான விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர்களுடன் ஒரு கூட்டம், நிதி ஆணைக்குழுவில் நடைபெற்றது. விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமமும் இந்த கூட்டத்திற் பங்குபற்றினார்.

பொருத்தமான கொள்கை தீர்மானங்களை மேற்கொள்ள அனைத்து மாகாணங்களிலும் விளையாட்டு துறைகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் பற்றி விவாதிக்க அனைத்து பிரதிநிதிகளுக்கும் ஒரு வாய்ப்பை வழங்குவதே இக் கூட்டத்தின் குறிக்கோள் ஆகும்

## 14. கூட்டுறவு, சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு, சமூக சேவைகள் மற்றும் பிள்ளை பராய அபிவிருத்தி ஆகிய துறைகள் சம்பந்தமான கூட்டங்கள்

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவில் ஒன்பது மாகாணங்களின் கூட்டுறவு, சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சமூக சேவைகள் ஆணையாளகளுடன் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தின் முக்கிய நோக்கமானது , முன்னைய ஆண்டுகளின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்து, சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடி தேவையான பரிந்துரைகள் வழங்குதலாகும்.

## 15. சமூக பொருளாதார குறிகாட்டிகள் மற்றும் சமமான பிராந்திய அபிவிருத்தியை அளவிடுதல் சம்பந்தமான கலந்துரயாடல்கள் .

நிதி ஆணைக்குழுவினால் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி புள்ளிவிபர மற்றும் கணக்கெடுப்பு திணைக்களம், மத்திய வங்கி, அரசிறை கொள்கை திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது . இக் கூட்டத்தின் முக்கிய நோக்கமானது சமூக பொருளாதார குறிகாட்டிகள் மற்றும் சமமான பிராந்திய அபிவிருத்தியை அளவிடுதல் சம்பந்தமான விதிமுறை குறிப்பினை(TOR) கலந்துறையாடுதலும் இறுதி தீர்மானமெடுதலுமாகும்,

**16. நிதி ஆணைக்குழுவும் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனமும் இணைந்த ஆய்வு கற்கைகள் சம்பந்தமான கலந்துரையாடல்**

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவால் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனதின் பங்குபற்றலுடன் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இக் கலந்துரயடலின் முக்கிய நோக்கமானது உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபை முறைகளின் அதிகாரங்கள் மற்றும் நடைமுறைகளின் அதிகாரப் பகிர்வுகள் சம்பந்தமாக இணைந்த ஆராய்வு கற்கைகளை நடத்துவதேயாகும். இணைந்த கற்கையானது செயல்திறன் வினைதிறன் செயல்பாடு மற்றும் சிறந்த நடைமுறைகளை இப் பகுதிகளில் செயல்படுத்த உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமாக புரிந்துணர்வு ஒபந்தம் ஒன்று தயார் செய்யப்பட்டு இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனதிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**17. மாகாண சபைகளின் நல்லாட்சியை மேம்படுதுவதற்கான பயிற்சி பட்டறை**

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவால் மாகாண சபைகளின் நல்லாட்சியை மேம்படுதுவதற்கான ஒரு நாள் பயிற்சி பட்டறை நிதி ஆணைக்குழுவில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒன்பது மாகாணங்களின் அனைத்து பிரதம செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள்(நிதி,திட்டமிடல்,பொறியியல்,நிர்வாகம், ஆளணி மற்றும் பயிற்சி ) பிரதம உள்ளக கணக்காய்வாளர்கள் ஆகியோர் ஆர்வமுடன் இப் பயிட்சிபட்டறையில் கலந்துகொண்டனர்.

மதிய வங்கியின் ஆளுநர், திறைசேரி செயலாளர், ஆணைக்குழுவின் உறுபினர்கள் மற்றும் திரு.அசோகா. S .குணவர்த்தன, நிதி ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர், ஆகியோர் சொற்பொழிவு, முன்வைப்புகளை மேற்ட்கொண்டு குழு கலந்துரையாடல்களிலும் பங்குபற்றினர்.

**18. நிதி ஆணைக்குழுவின் சட்ட வரைபு மாதிரி**

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களம் நிதி ஆணைகுளுழுவிற்கு சட்டவரைபின் அவதானிப்புகளை வழங்கியது. ஆணைக்குழு அவதானிப்புகளை கவனத்திற் கொண்டதுடன் இது சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் மேலும் கலந்துரையாட தீர்மானித்துள்ளது .

**19. சிறப்பு கற்கைகள்**

நிதி ஆணைகுழுவின் நடவடிக்கைகளுக்காக பல சிறப்பு கற்கைகள் முன்னெடுத்துச்செல்லப்பபட்டன. அவற்றில் பின்வருவன உள்ளடங்கும் :

- மதிய அரசிடமிருந்து மாகாணசபைக்கு வருவாயை மாற்றல்
- மாகாணங்களால் சேகரிக்கப்படும் மறைமுகவரி (தேசத்தை கட்டியெழுப்பும் வரி)
- நிதி ஆணைக்குழுவின் நிர்வாகப் பிரிவு நிதி ஆணைக்குழுவின் மனித வளக் கொள்கைதொடர்பாக கையேடு வரைபு ஒன்றினை தயாரித்து.
- சமமான பிராந்திய அபிவிருத்தி – தேசிய திட்டமிடல் கொள்கை திணைக்களம் மற்றும் நிதி ஆணைகுழுவின் நடைமுறைகள்
- மாகாண திட்டமிடல் செயல்முறை - கிழக்கு மாகாண சபையின் நடைமுறை

**20. கருத்தரங்குகள் மற்றும் பயிற்ச்சி பட்டறைகளில் பங்குபற்றல் /கலந்துகொள்ளல்**

நிதி ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் சில சிரேஷ்ட்ட உத்தியோகத்தர்கள் பின்வரும் கருத்தரங்குகள் மற்றும் பயிற்ச்சி பட்டறைகளில் கலந்து கொண்டனர்

- இலங்கையின் நகரங்களின் நிலைமை
- தேசிய மதிப்பீட்டுக் கொள்கை கட்டமைப்பின் உருவாக்கம்
- ஐந்து வருட அபிவிருத்தித் திட்டம் - வடமேல் மாகாணம்
- திட்ட செயல்முறை கையேட்டை மதிப்பாய்வு செய்தல்
- சுத்திகரிப்பு தொழிலாளர் ஹரிஸ்பத்துவ பதவிக்கு ஆட்சேர்த்தல்
- ஆளணி மறுசீரமைப்பு - தென் மாகாணம்
- ஆளணி மீளாய்வு -நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு மற்றும் சமூக சேவை திணைக்களம்
- சமமான பிராந்திய அபிவிருத்தி
- உள்ளூராட்சி மன்றங்களின் ஆதரவு செயற்திட்டம்
- மாகாண சபைகளின் நியதி சட்டங்களை கட்டமைபப்புபடுதுதல் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டத்தின் இலங்கைக்கான இயலுமை தொடர்பான மேற்பார்வையிடும் குழு
- சர்வதேச / பிராந்திய மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடத்துதல்

- வலுவான உலகளாவிய பொது - தனியார் கூட்டு மூலம் சுகாதார பராமரிப்பை கட்டியெளுப்புதல்
- உற்பத்தி செய்யப்பட்ட பால் மற்றும் திரவ பால் சம்பந்தமான கருத்தரங்கு
- 2019 ன் அரச பாதீடு பொருளாதாரந்தின் மீதான தாக்கம் சம்பந்தமான கருத்தரங்கு
- அரசியலமைப்பு சீர்திருத்த செயற்பாடுகளின் தற்போதைய நிலை பற்றிய கருத்தரங்கு

- பேராசிரியர் அமர்த்தியா சென்; (இந்திய பொருளாதார நிபுணர் / தத்துவவாதி)
- 21 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் பொருளாதார கண்ணோட்டம்
- நீர் இராஜதந்திரம்: சர்வதேச உறவுகளின் கருவியாக நீர்
- செயற்கை நுண்ணறிவின் பூகோள அரசியல்
- பாதீட்டு பகுப்பாய்வு 2019
- செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் தேசிய மூலோபாயம்

**21. நிதி ஆணைக்குழுவின் நிதி முன்னேற்றங்கள்**

நிதி ஆணைகுழு மாதாந்தம் நிதி ஆணைக்குழுவின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தது 2019 ஆம் ஆண்டின் முதற் காலாண்டிற்கான முனேற்ற மீளாய்வும் செய்யப்பட்டுள்ளது .

**22. நிதி ஆணைக்குழுவின் இணக்க அறிக்கை**

நிதி ஆணைகுழு அதன் நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து இணக்கங்களும் நிறைவேற்றப்படுவதை உறுதிபடுதுகின்றது. இது சம்பந்தமான இணக்க அறிக்கைகள் மாத அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு சமர்பிக்கப்படுகின்றன

**23. நிதி ஆணைக்குழுவிற்கு உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு**

ஒரு பணிப்பாளரும் (கொள்கை ஆய்வு மற்றும் வெளியீடுகள்), ஒரு முகாமைத்துவ உத்தியோகத்தரும் ஆணைக்குழுவின் பணிமனையில் நியமிக்கப்பட்டனர்.

**24. ஆணைக்குழு கூட்டங்கள்**

பின்வரும் திகதிகளில் ஆணைக்குழு கூட்டங்கள் நடைபெற்றன

- ✓ 26.01.2019
- ✓ 09.02.2019
- ✓ 30.03.2019

ஒழுங்கு முறையாக ஒவ்வரு ஆணைக்குழு கூட்டத்திற்கும் முன்னதாக ஆணைக்குழுவின்உப குழுக்கள் சந்தித்தன

பிரதான அலுவலர் குழு கூட்டங்கள் வாராந்தம் நடைபெற்றதுடன் முடிவுகளும் வழிமுறைகளும் பின்பற்றப்பட்டது.